# வடக்கு தொண்டர் ஆசிரியர்க்கு வவுனியாவில் நேர்முகப் பரீட்சை?

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய வடபகுதி மாவட்டங்களில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சையை வவுனியாவில் நடத்துமாறு கல்வி ராஜாங்க அமைச்சர் உத்தரவிட்டுள்ளதாகக் கொழும்பு நாளிதழ் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.

ஏனைய மாவட்டங்களில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் சமீபகாலமாக வழங்கப்படுகின்ற போதிலும் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறுவதால் நியமனங்கள் இம்மாவட்டங்களுக்கு வழங்கப்படவில்லை. ஆயினும் கடந்த வாரம் இம்மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியதையடுத்து கல்விச் சேவைகள் சபையிடம் இப்பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் இச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் மீண்டும் மின்வெட்டு வரலாம்

மீண்டும் கொழும்பில் மின்வெட்டு வரலாம் என நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த இரு வாரங்களில் நீரேந்து பகுதிகளில் மழை பெய்யாவிடில் வேறு வழியின்றி மின்வெட்டு வருமென்று கொழும்பு வானிலை அவதான நிலையம் தெரிவித்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

மின்சாரசபைப் பேச்சாளர் ஒருவர் இதனை ஊர்ஜிதம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இந்திய, மாலைதீவுச் சிறைகளில் இலங்கை மீனவர்

இந்தியா, மாலைதீவு ஆகிய நாடுகளின் சிறைச்சாலைகளில் இலங்கையைச் சேர்ந்த 60 முதல் 70 வரையிலான மீனவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை விடுவிப்பது தொடர்பாக வெளிநாட்டமைச்சு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கம்பஹா மாவட்ட எம். பி. சரத் சந்திர குணரத்ன பாராளுமன்றத்தில் கேட்டுக் கொண்டார்.

## துறைமுகம் வேண்டுமாம்

கல்முனை அல்லது அம்பாறையில் மீன்பிடித் துறைமுகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என பாராளுமன்றத்தில் பேசுகையில் நெசவுக் கைத்தொழிற் துறை அமைச்சர் அப்துல் மஜீத் கோரிக்கை விடுத்தார்.

## தமிழர் நலனில் இந்தியா அக்கறை என்கிறார் ஜா!

'தமிழ் மக்களது நலனில் இந்தியா அக்கறை கொண்டுள்ளது' என்று ஸ்ரீலங்காவுக்கான இந்தியத் தூதர் என். என். ஜா, கூறியதாகக் கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

'இந்தியா வாளாவிருக்கும் பார்வையாளன் அல்ல' என்றும் அவர் ஹோட்டல் இன்ரகொண்டினென்டலில் நடைபெற்ற றோட்டரி மாநாட்டில் பேசுகையில் கூறியதாகவும் இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இ.தொ.கா. நடமாடும் சேவை நடத்துகிறது

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நடத்தும் மாவட்ட ரீதியிலான நடமாடும் சேவை தலவாக்கலையில் நடத்தப்பட்டது.

தொழிற்சங்க மட்டத்திலானதாக இம் முதல் நிகழ்வினை இ.தொ.கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.


### சாவகச்சேரி நகரசபை

## ஆதனவரி அறிவித்தல்

1992ஆம் ஆண்டு 2ஆம் காலாண்டிற்குரிய ஆதனவரியை தண்டமின்றி 30-06-92 செவ்வாய்க்கிழமை பகல் 12 30 மணிவரை செலுத்திக்கொள்ளலாமென்பதையும். குறிப்பிட்ட திகதிக்கு பின்பு செலுத்தப்படும் வரியுடன், வசிப்பிட வளவுகளுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் 15 வீதமும் ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் சேர்த்து அறவிடப்படும் என்பதையும் வரியிறுப்பாளருக்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

எனவே 30-06 92 க்கு முன் வரிகளைச் செலுத்தி இச்சபையுடன் ஒத்துழைக்குமாறு சகலரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
08 06-1992

06033


## பொதுப்போட்டிப் பரீட்சை

1992 ஆம் ஆண்டு அமைய எழுதுநர்களைத் தெரிவு செய்யவென நடைபெற்ற திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகள் சகலரும் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படவிருக்கும் மத்திய, மாகாண சேவையில் எழுதுநர் மற்றும் சமாந்தர தரங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான பொதுப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப் பரீட்சைக்கான விண்ணப்ப இறுதித் திகதி 3. 7. 92 என்று தெரிவிக்கப்படுகிறது.

## விவசாயிகள் காயம்

கல்முனைக் குடியிருப்பு வட்டை என்ற இடத்தில் இரு விவசாயிகள் கண்ணிவெடியில் சிக்கிக் காயமடைந்தனராம்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி

முதல் அரையாண்டுப் பரீட்சை - 1991

மேற்குறிப்பிட்ட பரீட்சை யூன் மாதம் 27 ஆம், 28 ஆம் திகதிகளிலும் யூலை மாதம் 4 ஆம், 5 ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

மீள் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கிளையில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து உரிய கட்டணம் பற்றுச் சீட்டுடன் 19 06 92க்கு முன்பாக சமர்ப்பிக்கவும்.

பரீட்சை அனுமதி அட்டையை 24. 06. 92 அன்று பரீட்சைக் கிளையில் பெற்றுக்கொள்ளவும்.

பதிவாளர்

06032


## ஆசிரியர், ஊழியர் விவரம் தெரிவிக்கக் கோரிக்கை

வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் சகல கோட்டக்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதப்படி மாகாணசேவைக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஊழியர்கள், ஆசிரியர்களின் விபரங்களை மாதாமாதம் தமக்கு அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1989 ஆம் ஆண்டு தொடக்கம் அரச சேவையில் உள்ளோர் தொகையும், இவர்களில் வடகிழக்கு மாகாண சேவையில் சேர்ந்துள்ளோர் தொகையும் இம் மாகாண சேவையில் சேராதவர்களின் தொகையும் இவர்கள் இச் சேவையில் சேர்க்கப்படாமைக்குரிய காரணங்களையும் பிறமாகாணங்களில் இருந்து வடகிழக்கு மாகாண சேவைக்கு இடம்மாறி வந்த ஊழியர்களின் விபரங்களும் கூட இதில் கோரப்பட்டுள்ளன. (15)

## 'ராவய' வுக்கு எதிராக சிறப்புரிமைமீறல் பிரச்சினை

"ராவய" சிங்களப் பத்திரிகையில் வெளிவந்த செய்தி ஒன்று தொடர்பாக நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சிறப்பு உரிமை மீறல் பிரச்சினை கிளப்பப்பட்டது.

தெங்கு தொழிற் துறை அமைச்சர் ஹெட்டியாராச்சி இப் பிரச்சினையை சபையில் கிளப்பினார்.

## அவரது வயலிலேயே . . .

பண்ணாகம் உற்பத்திக் குழுவின் தலைவரது வயற்காணியில் புகுந்து குரக்கன் பயிரையும், சோளப் பயிரையும் மேய்ந்து அழித்த மாடு ஒன்று சுழிபுரம் கிழக்கு உற்பத்திக்குழுவால் பிடிக்கப்பட்டது.

பிரஸ்தாப மாட்டின் உரிமையாளருக்கு 150 ரூபா குற்றப் பணம் சுழிபுரம் கிழக்கு உற்பத்திக் குழுவால் விதிக்கப்பட்டது. (13)

## பாடுமீன் அணி வெற்றி

வீரவேங்கை விக்ரர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத் திற்காக ஒளிரா விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன் தினம் குமரர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்தாடிய றொக் கொம்பனி விளையாட்டுக்கழக அணியை 3:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

இப்போட்டிக்கு நடுவராக ஜீ. எம். செபஸ்தியாம்பிள்ளை கடமையாற்றினார் (16)

## ஆண்கள் பிரிவில் ஐ.வி. கழகம் பெண்கள் பிரிவில் திருமகள் வெற்றி

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமாக இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகமும், பெண்கள் பிரிவில் திருமகள் விளையாட்டுக் கழகமும் சாம்பியன்களாகின.

நேற்று முன்தினம் அரியாலை கிழக்கு சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் ஆண்கள் பிரிவில் அரியாலை அணி கலாமன்ற அணியை 15:12, 15:9 12: 15. 15:8 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

பெண்கள் பிரிவில் திருமகள் அணி தன்னை எதிர்த்தாடிய கலைமகள் அணியை 15: 7, 15: 4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

நடுவர்களாக கே 'ஏகாம்பரம், கே நாகேந்திரன் ஆகியோர் கடமையாற்றினார்கள் இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ் கரப்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் கப்டின் டீ. ஏ. எம். குணசிங்கம் கலந்து கொண்டார். (16)


### சிறு விளம்பரம்

#### ஜோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகம் நடவாமை சாபதோஷங்கள் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ ஜாதகத்துடன் நேரில் வரவும். அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாந்தி பரிகாரங்கள் கூறுவதுடன் மந்திரங்களும் வழங்குகிறோம் ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 96, கோவில் வீதி, நல்லூர். (ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவிலடி) (06036)

#### சோதிடம்

எம்மிடம் தந்த யந்திரங்கள், சாதகங்கள் எழுதி முடிந்தது விரைவில் பெற்றுக் கொள்ளவும். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 96 கோவில் வீதி (ஸ்ரீகைலாசபிள்ளையார் கோவிலடி) நல்லூர். 06034


## பரிசளிப்பு விழா

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா நாளை கல்லூரி அதிபர் திரு. சி டால தலைமையில் நடைபெறவுள்ளது (18)

## விரைவில் தேர்தல்

தாய்லாந்தில் அரசியல் குழப்ப நிலை தீர்ந்து சுமுக நிலை தோன்ற விரைவில் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்று புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள ஆனந்பன்யாராசுன் தெரிவித்துள்ளார்.

## கோரிக்கை

ஈழத்தமிழ் மக்கள் யுத்தத்தினால் அடையும் துயர் நீங்கவும், இந்துக் கோயில்கள் பாதுகாக்கப்படவும் தொடர்ந்து வெள்ளிக்கிழமைகளில் சகல சைவாலயங்களிலும் சிறப்புப் பிரார்த்தனை நடத்தப்பட வேண்டுமென யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம்

# பௌத்த விகாரை அபிவிருத்தி; ஸ்ரீலங்கா அரசு விசேட திட்டம்

ஸ்ரீ லங்காவில் உள்ள 2300 பௌத்த ஆலயங்களை அபிவிருத்தி செய்வதற்கு விசேட திட்டம் ஒன்று ஸ்ரீலங்கா அரசினால் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

புத்த சாசன ராஜாங்க அமைச்சர் லால் கமகேயினால் 2300 சிறுவர்களை பௌத்த பிக்குகளாக்கும் சிறப்பு நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு கிராமோதய மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பௌத்த மத வளர்ச்சி தொடர்பான விசேட மாநாட்டில் இத்தகவல் வெளியிடப்பட்டதாக ஸ்ரீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்றுத் தெரிவித்தது.

பொசன் பௌர்ணமி தினத்தன்று மிகிந்தலையில் நடைபெறவுள்ள விசேட மத நிகழ்ச்சியில் ஸ்ரீலங்கா ஜனாதிபதியும் கலந்துகொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# 15 ஆம் திகதிய மாநாட்டின் பின்பே ஒரு முடிவாம்

எதிர்வரும் 15 ஆம் திகதி ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ கூட்டவுள்ள தமிழ் அரசியற் கட்சிகள் மாநாட்டில் அக்கட்சிகள் கூறும் கருத்துக்கள், யோசனைகள் நன்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் வடக்கு, கிழக்குப் பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் ஒரு முடிவுக்கு வருமென அரசின் முக்கிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளதாக நேற்றுக் கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# க.பொ.த.[உ.த.] பரீட்சை ஆகஸ்ட் 1 இல் ஆரம்பம்

க. பொ. த. உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் 1 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை ஆகஸ்ட் 25 ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் வரையிலான பரீட்சார்த்திகள் தோற்றவிருக்கின்றனர் என்றும் இவர்களுக்கான பரீட்சைப் பிரவேச அட்டவணைகள் அடுத்த மாதம் 20 ஆம் திகதி முதல் அனுப்பிவைக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான அட்டவணைகள் பாடசாலை அதிபர்களுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அட்டவணைகள் அவர்கள் கொடுத்துள்ள முகவரிகளுக்கும் அனுப்பிவைக்கப்படும் என்றும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

# ரூ.20 லட்சம் ஹிரோயினுடன் வெளிநாட்டவர் சிக்கினார்

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் வந்திறங்கிய வெளிநாட்டவர் ஒருவர் 2 கிலோ ஹிரோயினைக் கடத்திவர முற்பட்டபோது சிக்கினதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருபது இலட்சம் ரூபா பெறுமதியான இதனை அவர் தகரங்களுக்குள் அடைக்கப்பட்ட பழங்களுக்குள் இருப்பதுபோல ஒளித்து வைத்து கடத்திவர முற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# தெரிவுக்குழுவில் மீண்டும் இணைய சு. க. தீர்மானம்

தெரிவுக்குழுவிலிருந்து விலகுவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்று முன்தினம் அவசரத் தீர்மானம் நிறைவேற்றியதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவது என்ற தீர்மானம் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஆயுதக்களைவென்ற போர்வையில் அநியாயக் கொலைகள் - சர்வதேச மயமாக்க வேண்டும்

- எஸ். ஜி. எம்

'வடக்குக் கிழக்கில் ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையவே பாதுகாப்புப் படையினர் அங்கே அனுப்பப்பட்டுள்ளனர்.

இது அரசாங்கம் கடைப்பிடிக்கும் இருமுக இராணுவ அரசியல் தந்திரோபாயமாகும்.'

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க ஜூன் 4 ஆம் திகதியமது வாராந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

இந்த இரட்டை அணுகுமுறையில் முக்கியமானது ஆயுதக்களைவு ஆகும். ஆயுதக் களைவு பற்றி 1987 ஒக்டோபர் பத்தாம் திகதி இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியும், பாதுகாப்பு அமைச்சர் கே.சி. பந்தும் கூட பேசியுள்ளனர். ஆனால் அது நடக்கவில்லை!

சிறிலங்கா பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணவும் கூடப் பேசியுள்ளார்.

ஆனால் இப்போது இங்கே நடப்பது என்ன? ஆயுதக்களைவுக்கும் ஆலயங்கள், ஆதரவற்ற அனாதைகள், அலைந்து திரியும் அகதி மக்கள், கல்விக் கூடங்கள், வைத்தியசாலைகள் மீதெல்லாம் ஆகாயத்திலிருந்து குண்டு போடுவதற்கும், ஆட்டிலறி ஷெல் அடிப்பதற்கும் என்ன தொடர்பிருக்கிறது அல்லது சம்பந்தமிருக்கிறது?

ஆயுதக் களைவு என்றால் அது நேரடியான போரிலேதான் முடியும். ஆகாயத்திலிருந்து குண்டு போடுவதால் போராளிகளிடமிருந்து ஆயுதத்தைக் களைகிறோம் என்று தர்க்கரீதியில் எதுவிதமும் நியாயப்படுத்த முடியாது.

மே, 18 இல் வற்றாப்பளை அம்மன் கோவில் மீது தாக்குதல், மே 31 இல் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் மீதும், அனாதைகள், அகதிகள் மீதும் தாக்குதல் என்பன பற்றி முன்பு எழுதியிருந்தோம்.

இப்போது மீண்டும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயச் சூழலில் நேற்று முன்தினம் குண்டுமாரி பொழியப்பட்டுள்ளது.

கல்வளைப் பிள்ளையார் கோவிலும் குண்டு வீச்சினால் சேதத்திற்குள்ளாகியிருக்கிறது.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயச் சுற்றாடலில் நான்குபேர் கொலைப்பட்டுள்ளனர்.

மொத்தமாக அப்பாவிப் பொதுமக்கள் ஏழுபேர் கொல்லப்பட்டுள்ளனர். பதினொரு பேர் படுகாயமடைந்தனர். பதினைந்து வீடுகள் வரை சேதமடைந்துள்ளன.

இவர்களெல்லாம் ஆயுதந் தாங்கியவர்களா? இவர்களிடமிருந்து ஆயுதக் களைவா நிகழ்கிறது? சேதமாக்கப்பட்ட வீடுகளுக்கும் ஆயுதக் களைவுக்கும் என்ன தொடர்பு? எதுவுமே இல்லை!

இராணுவ - அரசியல் இரட்டை அணுகுமுறையென பகிரங்கமாக பேசிக்கொண்டு அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்து, படுகாயப்படுத்தி அவர்களின் சொத்துக்களை நாசப்படுத்தி வருவது உண்மையில் இரட்டைத் தந்திரோபாயமல்ல - இரட்டை வேடமே.

ஜனாதிபதிக்கும், சிறிலங்கா அரசுக்கும், அதன் அதிகாரிகளுக்கும் மகஜர் அனுப்புவதால் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படப் போவதில்லை என்பதை தமிழினம் உணரவேண்டிய காலம் இது. இம்மாதம் ஐந்தாம் திகதி நடாத்தப்பட்ட ஆட்சேபனைப் பேரணி பற்றி கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிடவில்லை. ஆகவே இம்மண்ணின் மக்களின் ஆட்சேபனைகளை அரசும் இராணுவமும் அறிந்துகொண்டுதான் மீண்டும் குண்டு பொழியும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன என்பதை நாம் உணரவேண்டும்.

அரசாங்கத்தினதும், சிங்களப் பேரினவாதத்தினதும், வெகுசனத் தொடர்பு சாதனங்கள் உண்மைகளை மறைக்கின்றன. கொழும்புத் தமிழ்ப் பத்திரிகைகளும் அப்படியே.

இந்த சூழ்நிலையில் தமிழ் மக்களின் அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாக ஆயுதக் களைவு என்ற போர்வையில் கொல்லப்படுவதையும் படுகாயப்படுத்தப்படுவதையும் சர்வதேசமயப்படுத்த வேண்டும். உலகநாடுகளிற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

இதற்கான நடவடிக்கைத் தந்திரோபாயங்களை இனம் கண்டு முன்னெடுக்க வேண்டும்.

# உடுகம்பொலவைக் கைதுசெய்ய மேல் நீதிமன்றம் பகிரங்க பிடிவிறாந்து

பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளவரும், முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான உடுகம்பொலவைக் கைது செய்ய பகிரங்க பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ் உத்தரவு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியால் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

உடுகம்பொலவுக்கு எதிராக வழக்கு நேற்று முன்தினம் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி திருமதி ஷிராணி திலகவர்த்தன அவரைக் கைது செய்வதற்கு இந் நடவடிக்கையை மேற்கொண்டார்.

அவர் தலைமறைவாக இருந்து வருவது தெரிந்ததே.

## ★ தமிழகத்தில் ஸ்ரீலங்கா விமானப்படை அதிகாரிகளுக்குப் பயிற்சி

கோயம்புத்தூரில் உள்ள இந்திய விமானப்படை நிர்வாகக் கல்லூரியில் ஸ்ரீலங்கா விமானப்படை அதிகாரிகளும் பயிற்சிபெற்று வருகின்றனர்.

இத் தகவலை விமானப் படை எயர்கொமடோர் அகுலுவாரியா கோயம்புத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

விமானப் போக்குவரத்து போர் விமானங்கள் கட்டுப்பாடுகள் பயிற்சி முதலானவை இந் நிர்வாகக் கல்லூரியில் அளிக்கப்பட்டுவருகின்றன.

'த ஐலன்ட்' தகவல்

# பலாலியில் முப்படை அதிகாரிகள் பாரிய நடவடிக்கைக்குத் திட்டமாம்

வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாகவும் இது தொடர்பாக முப்படைகளையும் சேர்ந்த உயரதிகாரிகள் பலாலியில் திட்டமிட்டுவருவதாகவும் 'த ஐலன்ட்' நாளிதழ் நேற்று முன்பக்கச் செய்தியில் தெரிவித்துள்ளது.

"அடுத்த சில தினங்களில் வடக்கில் மீண்டும் பாரிய இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன, இது தொடர்பாக முப்படை உயரதிகாரிகள் பலாலியில் திட்டமிட்டுவருகின்றனர். இதே வேளை வடக்கில் உள்ள ஊரடங்குச் சட்டம் இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கும்" என்று இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உறுதி

மீனவர் ஒய்வூதியத்திட்டக் குறைபாடுகள் நீக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் உறுதியளித்தார்.

எதிர்வரும் 15ஆம் 16ஆம் திகதிகளில்

## சார்க் சபாநாயகர்கள் மாநாடு கொழும்பில்!

சார்க் நாடுகளின் சபாநாயகர்கள் மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் இலங்கை, இந்தியா, மாலைதீவு, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளின் பாராளுமன்றச் சபாநாயகர்களும், பாராளுமன்றச் செயலாளர்களும் கலந்துகொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ★ சிகரெட், சுருட்டு, பீடி வருடாந்தம் 30 லட்சம் பேர் உயிர் போக்குகிறது

புகையிலையைப் பாவிப்பதனால் ஆண்டு தோறும் சுமார் 30 லட்சம்பேர்வரை இறக்கிறார்கள் என்று ஐ.நா. சுகாதாரஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இப் பாவனையை இல்லாது ஒழிக்கும் நோக்குடன் சமீபத்தில் ஐ. நா. ஸ்தாபனம் புகையிலைப் பாவனையை உலகெங்கிலிருந்தும் அகற்றும் சிறப்பு நாளை பிரகடனப்படுத்தியிருந்தது.

மேலும், புகையிலையை அதன் எந்த வடிவில் அதாவது சுருட்டு, சிகரெட், பீடியாகவும் பயன்படுத்தினாலும் அதன் விளைவாக புற்றுநோய் உருவாகுவதாகவும் வைத்திய குறிப்புகள் தெரிவிக்கின்றன என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. (15)

# சூழல் பாதுகாப்பு மாநாட்டில் அஜன்டா-21' சாசனம் சமர்ப்பிப்பு

நாடுகளின் தலைவர்கள் இன்று கைச்சாத்திடவுள்ள சூழல் பாதுகாப்பு தொடர்பான சாசனத்திற்கு இறுதிவடிவம் கொடுப்பதில் உலக சூழல் தொடர்பாக பிறேசிலில் நடைபெறும் மாநாட்டு பிரதிநிதிகள் நேற்றுமுழு நாளும் தீவிரமாக உழைத்தனர்

'அஜன்டா-21'(Agenda-21) எனும் இந்தசூழல் பாதுகாப்பு தொடர்பான சாசனம் இன்று நடைபெறும் உச்சி மாநாட்டில் நாடுகளின் தலைவர்களின் கையொப்பத்திற்கென வழங்கப்படும்.

இந்த சாசன வரைவில் பாலைவனங்கள் விரிவடைந்து செல்வதை தடைசெய்வதான ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் செய்த சிபார்சுகளும் அடங்கியுள்ளன. ஜி-77எனும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கூட்டு அமைப்பும் தம் நாடுகளின் பாதுகாப்பு குறித்தும் இச்சாசனத்தில் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை இவ் உறய உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள நாடுகளின் பிரதிநிதிகள் நேற்று பிறேசில் நகரான ரியோடி ஜெனீரோவுக்கு வந்தவண்ணமிருந்தனர்.

## பம்பாயில் தலைமறைவான குமாரனும் குற்றவாளியாம்

அண்மையில் பம்பாயில் தொடர்மாடி வீடு ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட புலிகளின் ஆவணங்கள் தொடர்பாக அந்த வீட்டின் உரிமையாளரான புலிகளின் தீவிர ஆதரவாளர் எனக் கருதப்படும் குமாரன் என்பவரை சென்னை சிறப்பு நீதிமன்றம் தலைமறைவாகியுள்ள குற்றவாளியாக நேற்று அறிவித்தது.

பொலிஸாரின் மனு தொடர்பாக நீதிமன்றம் இந்த அறிவிப்பை வெளியிட்டது. குமாரன் அடுத்தமாதம் 7ஆம் திகதிக்கு முன்பாக நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டது.

பம்பாயில் அண்மையில் இம்மாடி வீடு பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டபோது அங்கு இருந்த ஒரு வெளிநாட்டுப் பெண் கைது செய்யப்பட்டதும் சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதும் தெரிந்ததே.

## மெரினாள் கப்பலில் பெருமளவு சீனிவரும்

கொழும்பில் இருந்து பெருமளவு சீனியை மட்டும் ஏற்றிக்கொண்டு மெரினாள் என்ற சிறிய கப்பல் அடுத்த வார முற்பகுதியில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும்என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சீனி கப்பலில் வந்து சேர்ந்ததும் உடனடியாக பல நோ கூ. சங்கங்களுக்கு விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 47

## பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்தனர்

நேற்று வலிகாமம் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களையடுத்து பன்னாலை கருகம்பனை மயிலிட்டி இளவாலை சித்திரமேழி முள்ளானை பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து வந்து போவதற்கு இடமின்றி வீதிகளில் காணப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் ஏற்கனவே வலிகாமத்தில் இடம்பெற்ற தாக்குதல்களையடுத்து இடம்பெயர்ந்து இப்பகுதிகளில் வசித்து வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பலர் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றுள்ளதையும் காண முடிந்தது. 22-06

## சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வீதிஒழுங்கைக் கடைப்பிடிக்கவும்

தற்போதைய நிலையில் காயமடையும் பொதுமக்களை வைத்தியசாலைகளுக்கு எடுத்துவரும் அம்புலன்ஸ் மற்றும் வாகனங்கள் வீதிகளில் தடையின்றி செல்ல சகலரும் ஒத்துழைப்புத்தருமாறு அறிவிக்கப்படுகிறது.

இதேநேரம் குறிப்பாகச் சைக்கிள்களில் செல்வோரும் வீதி ஒழுங்கைக் கடைப்பிடிக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது. 07

## மாதகலில் காலையும் மாலையும் குண்டு வீச்சு; ஒருவர் பலி

மாதகலில் நேற்றுக்காலையும் மாலையும் பொம்மர்கள் நான்கு குண்டுகளை வீசித் தாக்கின.

இதில் ஒன்று வெடிக்கவில்லை ஒரு கடை வீடு வாசிகசாலை என்பன சேதமாகின

மாலையில் றொபின் 12 என்பவர் மரணமானார் இ. கிருஷ்ணசாமி என்பவர் காயமடைந்தார். 22

## ★ வெளியூர்த்தபால்களை யாழ். பிரதம தபாலகத்தின் பெட்டிகளில் சேர்க்கவும்

தபால் பொதிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி பருத்தித்துறையிலிருந்து கொழும்பு செல்லும் குமணகப்பலில் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இதனால் நாளை பிற்பகல் 3 மணிவரை யாழ். பிரதம தபாலகத்தின் முன்பாகவும் உள்ளேயும் அமைந்துள்ள தபால் பெட்டிகளில் இடப்படும் வெளியூர்க் கடிதங்களும் கப்பலுக்கு அனுப்பிவைக்கப்படுமென தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார் 06

### வட்டுக்கோட்டையில் ...

என்பவரது வீட்டு வளவில் விழுந்து வெடித்தன

இக்குண்டு வெடிப்பின் போது அந்த வீட்டில் இருந்த கார்த்திகேசு கனகசபை (89) திருமதி ஆறுமுகநாதன் புஷ்பசொரூபி (41) ஆகியோரும் காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து வந்து அடுத்த வீட்டில் தங்கியிருந்த வே சிவசுப்பிரமணியம் (70 சரவணமுத்து சோமவல்லி. (55) சரவணமுத்து தேவராணி (25) மகன் ஆகியோரும் படுகாயமடைந்தனர்

இக்குண்டு வெடிப்பினால் கனகசபை ஆறுமுகநாதன், பொன்னம்பலம் அன்னலட்சுமி, பொ. சிவசுப்பிரமணியம் (பென்ஸ் மணியம்) ஆகியோரது வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாகின. 18

## யாழ். ஊரடங்கு தொடர்கிறது

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்கு நேற்று மாலை 6 மணிமுதல் நீக்கப்பட்டுள்ளது எனினும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் தொடர்ந்து ஊரடங்கு அமுலில் இருப்பதாக கடற்படைத் தலைமையகம் தெரிவித்தது.

### காயமுற்றோர் ...

வே. சிவசுப்பிரமணியம் (70) வட்டுக்கோட்டை, எம். இராசேஸ்வரி (53) அளவெட்டி வடக்கு, இந்திராணி சுந்தரலிங்கம் (43) அளவெட்டி வடக்கு, விஜயலக்சுமி கனகரட்ணம் (35 அளவெட்டி வடக்கு, ஏ. தர்மராசா (42) சந்தரோடை, இராமகிருஷ்ண பசுபதி (7) சுழிபுரம் மேற்கு, பத்மராணி பத்திரராசா (30) மல்லாகம், சுகிர்தா சந்திரன் (10) மல்லாகம், எம் பாலகுமார் (38) அளவெட்டி வடக்கு. சோ.விமலேஸ்வரி 21) பி சுந்தரலிங்கம் (45) அளவெட்டி வடக்கு. ராசேஸ்வரி கணேசன் (38) மல்லாகம், அன்னபூரணம் சத்தியா (48) மல்லாகம், வனஜா நாகலிங்கம் (19) இளவாலை வடக்கு. அப்புத்துரை யேசுராசா (30) மானிப்பாய். பரஞ்சோதி கேதீஸ்வரன் (9) மானிப்பாய். இராசேந்திரம் இராஜராணி (33) இளவாலை, அருணகிருஸ்ணபிள்ளை (27) இளவாலை, ஜீவராணி (32) தெல்லிப்பழை, பாக்கியம் பேர்னாண்டோ (55) மல்லாகம், ராசலட்சுமி பரஞ்சோதி சா (38) இளவாலை, கே. சிவநாதன் (49) வைமன் வீதி-நல்லூர் கே. பசுபதி (60) ஆனைக்கோட்டை, நிர்மலாதேவி கிருஷ்ணபிள்ளை (44) மானிப்பாய், வி இராமச்சந்திரன். (47) சுன்னாகம் கிரேசன் அடி, சின்னத்துரை (72 சுன்னாகம் வடக்கு, மீனாட்சி சின்னத்துரை (80) சுன்னாகம் வடக்கு. கே. தங்கவேல் (57) இளவாலை, எஸ். இராசரட்ணம் (47) தாவடி வடக்கு, கே. மகேந்திரன் (18) தாவடி வடக்கு. எஸ். பிலிப் (73), கே. பூதம்பிள்ளை (75). எஸ். நந்தகுமார் (11) இளவாலை மயிலங்கூடல், சுகுணா குமார் (40) இளவாலை, நாகராசா விமலநாதன் (48) ஜீவானந்தன். ஐரோனிசந்திரன் (9) மல்லாகம். சந்திரன் ஐரோன் (10), அருணாசலம் யோகேஸ்வரன் (35) மானிப்பாய், சந்திரசேகரி இரட்ணசிங்கம் (45) கச்சேரி கிழக்கு, செல்லப்பா குணரட்ணம் (69) கோண்டாவில் மேற்கு. கந்தையா சிவானந்தன் (49) வைமன்வீதி நல்லூர், அப்புத்துரை யேசுராசா (38) மானிப்பாய். இரசேராணி இராசேந்திரம் (32) மானிப்பாய். கே பசுபதி (60) மானிப்பாய், கு. பாலேஸ்வரன் (18) தாவடி வடக்கு. செல்லையா ராசரத்தினம் (47) தாவடி வடக்கு, இருளைசாமி (52) மாதகல்.

செய்தி அச்சுக்கு போகும் வரையில் காயமடைந்தவர்கள் யாழ் வைத்தியசாலை, சங்கானை வைத்தியசாலை, மூளாய் வைத்தியசாலை மற்றும் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வண்ணமிருந்தனர். (07)

## கிராமசேவகர் பரீட்சை பரீட்சார்த்திகள் ஏமாற்றம்

கிராமசேவை அலுவலர் ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பல பரீட்சார்த்திகள் தங்களுக்குரிய அனுமதி அட்டைகள் பெற யாழ் கச்சேரிக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பியதைக் காணமுடிந்தது

யாழ் கச்சேரியிலிருந்து யாழ் கோட்டப்பகுதியிலுள்ள விண்ணப்பதாரிகளுக்குமட்டுமே அனுமதி அட்டைகள் நேற்று விநியோகிக்கப்பட்டன

### மல்லாகத்தில் வீடுகள் சேதம்

மல்லாகத்தில் இடம்பெற்ற குண்டு வீச்சினால் நீதிமன்ற வீதியில் உள்ள இரு வீடுகள் முற்றாகச் சேதமாகின

இங்கு நான்கு குண்டுகள் இரு பொம்மர்களில் இருந்து காலையில் வீசப்பட்டன 22 43

### இருமீனவர்களை காணவில்லை

பூவரசந்தீவு கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் இரவு இறால் பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த இரண்டு குருநகர் மீனவர்களை காணவில்லை என தெரிவிக்கப்படுகிறது

இம் மீனவர்களை பூநகரி-கல்முனை பகுதி இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது 47

### கிளிநொச்சியில் யூன் மாத வவுச்சர்

யூன் மாதத்துக்குரிய பென்சன் வவுச்சர் கொழும்பில் இருந்து கிளிநொச்சிக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும்

இந்த வவுச்சர்கள் இன்னும் ஒரு சில நாள்களில் யாழ்ப்பாணம் வந்தடையலாம் என யாழ் செயலக ஓய்வூதிய திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. 47

### முல்லைத்தீவில் குண்டு வீச்சு

முல்லைத்தீவு காட்டுப்பகுதியிலும் மணலாற்றில் குடியிருப்புகள் மீதும் விமானத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

### உதவக் கோரிக்கை

வலி வடக்கில் இருந்து இராணுவ நடவடிக்கைகளால் வெளியேறும் மக்களுக்கான அவசர உணவு விநியோகத்தை சீராக வழங்க முடியாமல் வான் தாக்குதல்கள் இடம்பெற்றுவருவதால் பொதுநல ஸ்தாபனங்கள் இம்மக்களுக்கு உதவி வழங்க விரும்புபவர்கள் 83/2. காங்கேசன்துறை வீதி, கொக்குவில், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், அளவெட்டி, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் காரியாலயங்கள்; மருதனார்மடம் சர்வோதயம் பிரதேச அலுவலகம் ஆகிய இடங்களில் தொடர்புகொள்ளலாம் என தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

### சுன்னாகத்தில் ...

குதல் நடத்தப்பட்டதால் அவ்வீடு பலத்த சேதமடைந்தது.

இவரது தகப்பனார் ந. சின்னத்துரை 65, ந. மீனாட்சி 70 ஆகியோரும் காயமடைந்தனர். 43-22-07-54

### பலத்த ஷெல் தாக்குதல்

நேற்று முழுவதும் பலாலி முகாமைச்சூழவுள்ள பகுதிகளில் இராணுவத்தினர் பலத்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், தெல்லிப்பழை, அளவெட்டி, இளவாலை, மயிலங்கூடல், கருகம்பனை, பன்னாலை ஆகிய பகுதிகளில் இவை விழுந்து வெடித்தன. (3..)

### கடற்படை தாக்கு

நேற்று முழுவதும் கடற்படையினர் மாதகல், சேந்தான்குளம் திருவடி நிலைப் பகுதிகளில் பலத்த கடற்பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டனர்

இவை மாதகல, இளவாலை விளான் மாரீசன்கூடல பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன 22

### ஹெலிசூடு

நேற்று முழுவதும் வலிகாமம் பகுதியில் ஹெலி பரவலாக தாக்குதல் நடத்தியது

அளவெட்டி, மல்லாகம் சுன்னாகம்பண்டத்தரிப்புவிளான் இளவாலை ஆகிய பகுதிகளில பரவலாகத் தாக்குதல் நடாத்தப்பட்டது

இதனால இப்பகுதி முழுவதும் வெறிச்சோடிக் காணப்பட்டது. கடைகள சந்தைகள் எதுவும் இயங்கவில்லை

22 18 47 07 06

### தாக்குதல் மத்தியில் திருமணங்கள்

நேற்று குடாநாட்டின் பல பாகங்களிலும் மும்முனைத் தாக்குதலின் மத்தியிலும் பல இடங்களில் திருமணவைபவங்கள் நடைபெற்றன

திருமணவீட்டில் இருந்த இருவர் மீதும் ஹெலியில் இருந்து சுடப்பட்டு காயமடைந்தனர் 22 06

### லொறிமீது தாக்குதல்

இளவாலை - விளான் வீதியில் வெங்காயம் ஏற்றி வந்த லொறியை நோக்கி காலையில் பொம்மர் நான்குகுண்டுகளை வீசியது

இதனால் இப்பகுதியில் உள்ள சில வீடுகள் சேதமாகின 22 07

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 12-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது